Tamil 2009
Tuberculosis (TB)
Your Questions Answered

நோயாளிகளுக்கான தகவல்கள்



## அதிக வயது ஆன பிறகு பி.சி.ஜி. எடுத்துக் கொள்வது நல்லதா அல்லது பயணம் செய்கையில் எடுத்து கொள்வது நல்லதா?

35 வயதிற்கு மேற்பட்டவர்கள் பி.சி.ஜி. எடுத்துக் கொண்டால் அதிக அளவு அது வேலை செய்வதில்லை என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. உடல் நலப் பாதுகாப்பு அளிப்பவர்கள், வயதானவர்கள் மத்தியில் வேலை செய்பவர்கள், ஆதரவற்றோர் இல்லம், அகதிகள் முகாம், ஆய்வுக் கூடம், சிறைச்சாலை மற்றும் கால்நடை ஊழியர்களில் 35 வயதிற்குட்பட்டவர்களுக்கு பி.சி.ஜி.யைப் பரிந்துரைக்கலாம். பி.சி.ஜி. எடுத்து கொள்ளாத 16 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அதிக அளவு காசநோய் வருவதற்கு வாய்ப்பிருக்கும் நாடுகளுக்குச் சென்று மூன்று மாதங்களுக்கு மேல் தங்க நேர்ந்தால் அவர்கள் சரும பரிசோதனை செய்து பி.சி.ஜி. தேவையா என்று பார்த்து கொள்ள வேண்டும். வழக்கமாக பயணத்திற்கான பி.சி.ஜி. மற்றும் அதற்கான பரிசோதனையை தனியாரில் செய்துக் கொள்ள வேண்டும்.

## காசநோய் யாருக்கும் வருமா?

யாருக்கு வேண்டுமானாலும் காசநோய் வரலாம் (யூ.கே. மந்திரி, சில உலக புகழ் பெற்ற பாடகர்கள், ஒரு ஆர்ச்பிஷம் போன்றவர்கள் முந்தைய நோயாளிகள்!) ஆயினும் ஏழ்மை சூழ்நிலையில் இருப்பவர்களை அல்லது சரியாக சாப்பிடாதவர்களை காசநோய் அதிகளவில் பாதிக்கிறது (ஆதரவற்றோர்கள் அல்லது வளர்ந்து வரும் நாடுகளில் வாழ்பவர்கள்) மேலும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் - குறிப்பாக ஹெச்.ஐ.வி.

## காசநோய் பற்றிய கவலை எனக்கிருந்தால் நான் யாரிடம் இதுப் பற்றி பேச வேண்டும்?

உங்களுக்கோ உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கோ காசநோய் இருப்பதாக தெரிய வந்தால் உங்கள் மருத்துவரிடம் இதுப் பற்றி பேச வேண்டும்.

## காசநோய் திரும்ப வருமா?

ஆம். இதற்கு வாய்ப்புகள் இருக்கிறது, எனவே, உங்களுக்கு இதுப் பற்றி சந்தேகம் இருந்தால் ஜி.பி.யை அணுகவும்.

## காசநோய் எவ்வளவு பரவலானது?

காசநோய் வளர்ந்து வரும் நாடுகளில் பரவலானது. ஏனென்றால் அங்கு

காசநோய் வளர்ந்து வரும் நாடுகளில் பரவலானது. ஏனென்றால் அங்கு வாழும் மக்களால் சிறந்த சிகிச்சையைப் பெறுவதற்கு செலவிட முடியாது. நோய் பற்றிய மூட நம்பிக்கைகளும் நோயாளிகள் சிகிச்சை எடுத்துக் கொள்வதிலிருந்து தடுக்கின்றன. **அதனால் தான் குணப்படுத்தக் கூடியதாக இருந்தும் ஒவ்வொரு வருடமும் 2 மில்லியன் மக்கள் காசநோயினால் மடிகின்றனர்.**
இந்த நிலை யூ.கே. முழுவதிலும் 20%மும் லண்டனில் மட்டும் 50%மும் அதிகரித்துள்ளது. இவ்வெண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகிறது.

## நான் மற்ற நோயாளிகள்/குழுக்களை ஆதரவுக்காகத் தொடர்புக் கொள்ளலாமா?

நீங்கள் மற்ற நோயாளிகளுடன் பேச விரும்பினால் ***TB Alert*** டைத் தொடர்பு கொள்ளுங்கள். இந்தப் பிரசுரத்தின் பின்புறம் தொடர்புக் கொள்ள வேண்டிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## என்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா?

காசநோய் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் அமைப்பான டி.பி. அலர்ட்டில் நீங்கள் நண்பராகலாம். இவ்வமைப்பு யூ.கே. மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் காசநோய் பற்றிய செயல் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

## எங்களுக்கு ஏன் உங்கள் உதவியும் ஆதரவும் தேவை

***TB Alert*** மருத்துவர்கள், அரசு, மற்ற அரசு சாரா அமைப்பு மற்றும் சாதாரண மக்களை வைத்து யூ.கே.வில் காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. காசநோயை குணப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகிறது. இதனால் உலகம் முழுவதும் உள்ள இந்நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் குணமடைவார்கள்.
***TB Alert*** வளர்ந்து வரும் நாடுகளின் செயல்திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கிறது. இதனால் அனைத்து நோயாளிகளும் சரியான சிகிச்சையைப் பெறுவார்கள்.
யூ.கே. மற்றும் உலக அளவில் காசநோயை அழிப்பதற்கு வேலை செய்து வரும் ஒரே காசநோய் அமைப்பு ***TB Alert*** மட்டுமே.

**நீங்கள் உதவி செய்யலாம்!**

காசநோயிலிருந்து உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பு அளியுங்கள்

**TB Alert**,
Community Base,
113 Queens Road,
Brighton BN1 3XG
தொலைபேசி எண்: 01273 234030

மேலும் விவரங்களுக்கு அல்லது இந்த பிரசுரத்தின் பிரதிகளைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 770 (அலுவலக நேரத்தில் மட்டும்).

டி.பி.அலெர்ட்டிற்கு நன்கொடை வழங்க அல்லது தொண்டு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 784 (அலுவலக நேரத்தில் மட்டும்).

அல்லது www.tbalert.org என்கிற இணையதளத்தைப் பாருங்கள்

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனம். இது நோயாளிகளுக்குத் தேவையான தகவல்களைக் கொடுத்து என்.ஹெச்.எஸிற்கு ஆதரவு அளிக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளில் நோயாளிகள் சரியான தகவல்களும் சிசிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

தலைவர்: சர் ஜான் க்ராஃப்டன் எம்.ஏ. எம்.டி. எஃப்.ஆர்.சி.பி (ணிபீ ணீஸீபீ லிஷீஸீ)
ஆதரவு: ஆர்ச் பிஷப் தெஸ்மண்த் டுடு
தலைமைத் தாங்குபவர்: திரு பவுல் சாமர் ஃபெல்ட்
செயலாளர்: ப்ரொஃபசர். பீட்டர் டேவிஸ்

இந்தப் பிரசுரத்தில் காசநோய் மற்றும் ஹெச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் உங்களுக்கு இவற்றைப் பற்றிய பொதுவான தகவல்களை அளித்திருக்கும். நோயாளிகளின் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மருத்துவர்களின் அறிவு, நிபுணத்துவம், திறமை ஆகியவற்றை இது ஈடு செய்யாது. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமான சந்தேகங்களை உடல் நல பாதுகாப்பு நிபுணர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட, உத்திரவாதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் இதன் பதிவு எண். 3606528 பதிவு தருமஸ்தாபன எண். 1071886 வடிவமைப்பு: வொர்க்சாங், லண்டன் 020 8352 8300

# காசநோய் பற்றிய உங்கள் கேள்விகளுக்கு ழ்டுபதில் அளிக்கப்ப




NHS

TAMIL_63796 TB YQA.indd 1
10/06/2009 13:35



## காசநோய் என்றால் என்ன?

காசநோய் என்பது ஒரு பாக்டீரியா மூலமாகப் பரவும் நோய். இது பரவலாக நுரையீரலை பாதிக்கும். ஆனால் இவை உடலின் எந்த பகுதியையும் பாதிக்கலாம். ஆறு மாதங்களுக்கான மருந்தினை எடுத்துக் கொண்டாலே காசநோயை குனப்படுத்திவிடலாம்.
நுரையீரல் அல்லது தொண்டையை பாதிக்கும் காசநோய்தான் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. சரியான மருந்தை எடுத்துக் கொண்டால் இரண்டு வாரங்களிலேயே பல பேருக்கு இது குணமாகிவிடும்.

## காசநோய் எப்படி வருகிறது?

நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமினாலோ தும்மினாலோ கிருமிகள் காற்றில் பரவுகின்றன. இதனை மற்றவர்கள் சுவாசிக்க நேர்கிறது. இதனால் காசநோய் வருகிறது. காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் அதிக நேரம் செலவிடுபவர்களுக்கும் (இவர்கள் அநேகமாக வாழ்க்கைத் துணையாகவோ, குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களாகவோ, சில நேரம் உடன் பணிபுரிபவர்களாகவோ இருப்பர்) இந்நோய் வர அதிக வாய்ப்புள்ளது. பேருந்து அல்லது இரயில் போன்றவற்றில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் பயணம் செய்வதனால் காசநோய் பரவ வாய்ப்பில்லை. ஆயினும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் அதிக நேரம் செலவிடுவதால் காச நோய் பரவுகிறது. காசநோய் உமிழ்வதனாலோ, பொருட்களைப் பகிர்ந்து கொள்வதனாலோ பரவுவதில்லை.

## காசநோய் என்னை எவ்விதத்தில் பாதிக்கும்?

காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குக் கீழ்க்கண்டவற்றில் சில அறிகுறிகள் இருக்கும்:

- வழக்கமான மருந்து சாப்பிட்டும் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து இருமல் இருத்தல்
- காய்ச்சல் (அதிக வெப்பம்)
- படுக்கையை மாற்ற வேண்டிய அளவுக்கு இரவில் வியர்வை அதிகமாக இருத்தல்
- எவ்வித காரணமும் இல்லாமல் எடைக் குறைதல்
- களைப்படைதல் (சக்தி குறைதல் அல்லது அசதி)
- சுரப்பி வீக்கம்
- எடைக் குறைதல்
- இருமும் போது இரத்தம் வருதல் (இது மிகவும் அரிதாக நிகழ்வது. அப்படி நிகழ்ந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம்)

உடலின் மற்ற பகுதிகளில் காசநோய் ஏற்பட்டால் அது வலியையும் வீக்கத்தையும் உண்டாக்கும். குழந்தைகளுக்கும் சில சமயம் பெரியவர்களுக்கும் காசநோய் மூளை, தண்டுவடம் முதலியவற்றை பாதிக்கும். இந்த அனைத்து அறிகுறிகளும் மற்ற பிரச்சனைகளுக்கான அறிகுறிகளாக இருக்கலாம், ஆனால் உங்களுக்கு இவற்றில் மூன்றுக்கும் அதிகமான அறிகுறிகள் இருந்தால் நீங்கள் உள்ளூர் மருத்துவமனையில் இருக்கும் மருத்துவர் அல்லது செவிலியரிடம் கலந்து பேசுங்கள்.

## காசநோய் இருப்பது எப்படி கண்டுபிடிக்கப்படுகிறது?

உங்களிடமிருந்து ஸ்ப்யூட்டம் மாதிரி எடுத்துக் கொள்ளப்படும். அதில் காசநோயை உருவாக்கும் பாக்டீரியா இருக்கிறதா என்று மைக்ரோஸ்கோப் அடியில் வைத்துப் பார்ப்பார்கள். அல்லது, ஆய்வுக்கூடத்தில் கல்ச்சரில் வைத்து வளர்கிறதா என்று பார்ப்பார்கள். சில சமயம் சரும பரிசோதனை இரத்தப் பரிசோதனை அல்லது மார்பு x-ray எடுக்கப்படும்.

## எனக்கு காசநோய் இருந்தால் நான் மருத்துவமனையில் தங்க வேண்டுமா?

இல்லை, ஆனால் பரிசோதனை செய்வதற்காக நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படலாம்.

## காசநோய்க்கு என்ன சிகிச்சை அளிக்கப்படுகிறது?


உங்கள் காசநோய் மருத்துவரோ செவிலியரோ உங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு நான்கு வகையான மருந்துகளை அளிப்பர். அவைகளாவன:

- ரிஃபாம்பிசின்
- ஐஸோனியாஸிட்
- பைராஸினமைட்
- எத்தாம்புட்டால்

(ஐஸோனியாஸிட், ரிஃபாம்பிசின், பைராஸினமைட் கலந்தது தான் ரிஃபேட்டர்).
இரண்டு மாதங்கள் கழித்து அல்லது நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய மருந்தினை எடுத்துக் கொண்ட பிறகு பாக்டீரியா பரிசோதனை செய்யப்பட்டதும் சிகிச்சைக்கு கொடுக்கப்படும் மாத்திரை ஐஸோனியாஸிட் மற்றும் ரிஃபாம்பிசின் (இது இரண்டும் கலந்தது தான் ரிஃபினாஹ்) என்று இரண்டாகக் குறைக்கப்படும்.

## இந்த மாத்திரைகளால் பக்க விளைவுகள் உண்டாகுமா?

ரிஃபாம்பிசின் சிறுநீர் மற்றும் உடலிலிருந்து வெளிவரும் கண்ணீர் போன்ற நிணநீர்களை ஆரஞ்சு சிகப்பு நிறமாக மாற்றும்.
இது மற்ற மாத்திரைகளின் செயல்பாட்டை பாதிக்கும், குறிப்பாக, கருத்தடை சாதனங்களின் செயல்பாட்டைக் குறைக்கிறது. எனவே மருத்துவர் உங்களுக்கு வேறு ஏதேனும் மருந்தைப் பரிந்துரைக்கையில் அவரிடம் நீங்கள் காசநோய் சிகிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைத் தெரிவியுங்கள்.



மாத்திரைகள் இவற்றில் சிலவற்றை அரிதாக உருவாக்கக் கூடும்:

- சொறி
- உடல் நல பாதிப்பு
- ஊசிகள்
- மஞ்சள் காமாலை (சருமமோ கண்களோ மஞ்சள் நிறமாதல்). இப்படி நடந்தால், காசநோய் மருந்தினை எடுத்து கொள்வதை நிறுத்துங்கள். உங்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி தேவைப்படுகிறது.

காசநோய் செவிலியரையோ மருத்துவரையோ அணுகுங்கள்.

## நெருங்கிப் பழகுபவர்களுக்கு என்னவாகும்?

நீங்கள் அதிக நேரம் செலவிடுபவர்களின் பெயர்களைப் பட்டியலிடும்படி உங்கள் காசநோய் செவிலியர் கேட்பார். அவர்களை மார்பு சம்பந்தமான சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக வரச் செய்வார்கள். அங்கு இரத்தப் பரிசோதனை அல்லது சரும பரிசோதனை, மற்றும்/மார்பு ஜ்-க்ஷீணீஹ் எடுக்கப்படும்.

## காசநோய் வராமல் பாதுகாக்க முடியுமா?

பி.சி.ஜி. என்னும் தடுப்பு மருந்து உள்ளது. இது அனைத்து விதமான காசநோயையும் தடுக்காது. ஆயினும் குழந்தைகளுக்கு கடுமையான காசநோயான மூளையிலும் முதுகுத் தண்டிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய காசநோயிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. பி.சி.ஜி. தடுப்பு மருந்து உலகம் முழுவதும் பெரும் அளவில் உபயோகிக்கப்படுகிறது. ஆயினும் 9 மில்லியன் (பி.சி.ஜி.யை எடுத்துக் கொண்டவர்களிலும் பலர்) மக்கள் காசநோயினால் பாதிக்கப்படுகின்றனர். புது தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து வருகின்றனர். யூ.கே.வில் காசநோய் உண்டாவதற்கு அதிக வாய்ப்பிருக்கும் குழந்தைகளுக்கும் சில பெரியவர்களுக்கும் பி.சி.ஜி. கொடுக்கப்படுகிறது. மேலும் கூடுதல் விவரங்களுக்கு பி.சி.ஜி. பற்றிய எங்கள் பிரசுரத்தைப் பெறுவதற்கு 0845 456 0995 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## நான் கீழ்க்கண்ட முறைகளில் டி.பி. அலர்ட்டின் நண்பனாக விரும்புகிறேன் (சரியான இடத்தில் ✔ செய்யவும்)

### அ. நன்கொடை கொடுத்து

- ❑ £................................... காசோலை இணைக்கப்பட்டுள்ளது. (*TB Alert* பெயரில)
- ❑ இதனையும் நான் இனி மேல் கொடுக்கும் நன்கொடைகளையும் என் அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள். நான் யூ.கே.வில் வரி செலுத்துபவர்.*

தேதி:...........................................................................

* நீங்கள் இதனை டிக் செய்தால், *TB Alert* நீங்கள் நன்கொடையாகக் கொடுக்கும் ஒவ்வொரு பவுண்டுக்கும் உள்நாட்டு வருவாயிலிருந்து 28.2 ஜீ பெறலாம். நீங்கள் அதிக வரி செலுத்துபவராக இருந்தால் நீங்கள் குறைவான வரிக்கும் அதிகமான வரிக்குமான வித்தியாசத்தை உரிமையுடன் கேட்டுக் கொள்ளலாம். நீங்கள் வருமான வரி செலுத்தவில்லையென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்த மறவாதீர்கள்.

- ❑ நான் வழக்கமாக நன்கொடை வழங்க விரும்புகிறேன் - அதற்கான விண்ணப்பத்தை அனுப்பி வையுங்கள்
- ❑ நான் *TB Alert* டுக்கு உயில் எழுதிவைக்க விரும்புகிறேன்.

### ஆ. நான் தொண்டு செய்பவராக ஆவதன் மூலம்

நான் குறிப்பாக ஈடுபட விரும்புவது:

- ❑ துணைச் சேவை மற்றும் பத்திரிகை/ஊடக வேலை
- ❑ எனது இடத்திலிருந்து நிதி திரட்டுவது
- ❑ சவாலான அல்லது விளையாட்டு நிகழ்ச்சிகள்
- ❑ பத்திரிகையாளர்களால் பேட்டி எடுக்கப்படுவது (நோயாளிகள்/முந்தைய நோயாளிகள் மட்டும்)
- ❑ நிர்வாக வேலைகளில் துணை புரிவது

**தயவு செய்து கொட்டை எழுத்துகளில் எழுதவும்**

தேதி:...........................தலைப்பு திரு/திருமதி/செல்வி/Ms அல்லது
(பொருத்தமானவற்றை சுழிக்கவும்)

மற்றவை:............தந்தைப் பெயர்: ..................................................

பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

.......................................................... தபால்கோடு: ............

தொலைபேசி: ..........................................................................

ஃபேக்ஸ்: ..........................................................................

மின்னஞ்சல்: ..........................................................................

- ❑ *TB Alert* உங்களைப் பற்றிய தகவல்களை வைத்திருந்து எங்கள் செயல்பாட்டினைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அளிக்கும். மின்னஞ்சல் அனுப்பி உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டோம்! எங்களிடமிருந்து எந்த தகவலையும் பெற வேண்டாம் என்று விரும்பினால் இங்கே டிக் செய்யவும்.
- ❑ இது போன்ற அமைப்புகளுக்கு உங்களது பெயரை அனுப்ப வேண்டாம் என்று நீங்கள் விரும்பினால் இங்கே டிக் செய்யவும்

நிறைவு செய்தவுடன், தயவு செய்து இதை கிழித்தெடுத்து *TB Alert* , ப்ரீபோஸ்ட் லோன் 12815, லண்டன் ஶகீ10 1ஃஷெ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.